2014 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

203—

மாணவியர் விடுதி

***42356—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதி, எரகுடி ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதிக்குட்பட்ட, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், எரகுடி ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்கு ரூபாய் 71,31,400 செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் விடுதி கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் உப்பிலியாபுரம் ஒன்றியம், எரகுடி ஊராட்சியிலுள்ள மாணவியர் விடுதிக்கு 2011–2012 ஆம் ஆண்டில் அதற்கான நிதியைக் கேட்டவுடன் வரம் தரும் அன்னையாய்*

மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்ததற்கும், 2013–2014 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு எரகுடி பகுதியிலே ஒரு கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்ததற்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மேலும், உப்பிலியாபுரம் ஒன்றியம், தென்பரநாடு ஊராட்சியில் உள்ள டாப்செங்காட்டுப்பட்டியில் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு மாணவியர்கள் விடுதி கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமங்களிலிருந்து பத்திற்கும் மேற்பட்ட கிராமப் பள்ளி மாணவ, மாணவியர்கள் வந்து அங்கு கல்வி பயில்கின்றார்கள். அவர்களுக்கும் டாப்செங்காட்டுப்பட்டியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாணவியர்கள் விடுதி கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து வசதிகளும் அளித்து, ஆரோக்கியமான சூழ்நிலையில் தங்கி, சிறப்பாகக் கல்வி பயில வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த இடத்தை ஆய்வுசெய்து, விதிமுறைகளுக்குட்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப சாத்தியக்கூறு இருக்குமாயின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கிய விலையில்லாப் பொருட்களையெல்லாம் பெற்று, டாப்செங்காட்டுப்பட்டியில் திருச்சி மாவட்டத்திலே அரசுப் பள்ளிகளில் இரண்டாவது இடத்தை அந்தப் பள்ளி பெற்றிருக்கின்றது. மேலும், பல ஊர்களிலிருந்தும், சேலம் மாவட்டத்தில் இருந்துகூட வந்து அந்தப் பள்ளியில் குழந்தைகள் கல்வி பயில்கின்றார்கள். அவர்களுக்குத் தங்கும் விடுதி, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சில் கட்ட பரிந்துரை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

மீன்பிடித் துறைமுகம்

***35952—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கடற் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் கடற் பகுதியில் மீன்பிடித் துறைமுகம்